பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
20 03 2025 7 15
வியாழக்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள்

1. உற்பத்தி துறையில் இந்தியா முதன்மை நாடாக முன்னேறி வருவதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் பெருமிதம் தெரிவித்துள்ளார்.
2. உயிரி தொழில்நுட்பத் துறையில் தனியார் பங்களிப்பை ஊக்குவிப்பது குறித்து மைக்ரோசாஃப்ட் முன்னாள் தலைவர் திரு. பில்கேட்ஸ் உடன் மத்திய அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் ஆலோசனை மேற்கொண்டார்.
3. நாட்டின் வேலைவாய்ப்பின்மை விகிதம் மூன்று புள்ளி இரண்டு சதவீமாக குறைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலாஜே தெரிவித்துள்ளார்.
4. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் ஜனவரி மாதம் வரை 17 லட்சத்து 89 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர் என்று மத்திய அரசு கூறியுள்ளது.
5. சென்னை சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Akanksha Salunkhe** மற்றும் **Anahat Singh** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சேவைத் துறையில் சிறந்து விளங்கும் இந்தியா, உற்பத்தி துறையில் முதன்மை நாடாக வேகமாக முன்னேறி வருவதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் பெருமிதம் தெரிவித்துள்ளார்.
புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், குறிப்பிட்ட அரசு துறைகள் மட்டுமே பாரம்பரிய அணுகுமுறையைக் கொண்டிருந்த நிலை மாறி தற்போது கூட்டுப் பங்களிப்புடன் விரைவான வளர்ச்சியை உற்பத்தித்துறை அடைந்து வருவதாகக் கூறினார்.
கல்வித்துறை, ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஒன்றிணைந்து புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய தீர்வுகளை உருவாக்கி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.
தொழில்துறையின் அனைத்து நிலைகளிலும் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும், திறமைவாய்ந்த மக்கள் ஒன்றிணைந்து புதிய தீர்வுகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் திரு. பில்கேட்ஸ், புதுதில்லியில் இன்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங்கை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.
இந்தியாவின் புதுமைக் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பது, உயிரி தொழில்நுட்ப மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் தனியார் பங்களிப்பை ஊக்குவிப்பது குறித்து இந்த சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டது.
பொருளாதார வளர்ச்சியில் உயிரி தொழில்நுட்பத்தின் கொள்கைகள் மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

நாட்டின் வேலைவாய்ப்பின்மை விகிதம் 2023-24ஆம் ஆண்டில் 3 புள்ளி 2 சதவீமாக குறைந்துள்ளது.
மாநிலங்களவையில கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலாஜே, இந்த விகிதம் கடந்த 2017-18ஆம் ஆண்டில் 6 சதவீதமாக இருந்தது என கூறினார்.
உற்பத்தி துறையில் வேலைவாய்ப்பை பொறுத்தவரை 2022-23ஆம் ஆண்டில் 6 கோடியே 30 லட்சமாக அதிகரித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமரின் பல்வேறு திட்டங்கள் மூலம் அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாகவும் திருமதி ஷோபா கரந்தலாஜே தெரிவித்தார்.

<<<>>>

நாடு முழுவதும் 46 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் 41 மெகா உணவு பூங்காக்கள் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாக உணவு பதப்படுத்துதல் தொழில்துறை இணையமைச்சர் திரு. ரவ்னீத் சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், உணவு பதப்படுத்துதல் துறை தொடர்பான ஆயிரத்து 100 கட்டமைப்பு திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக கூறினார்.

இதன் மூலம் நாடு முழுவதும் உள்ள 4 லட்சம் விவசாயிகள் பலனடைவார்கள் என்று குறிப்பிட்டார்.

பிரதமரின் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், உணவு பதப்படுத்துதல் தொழிலில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்குத்தொகை திட்டம், மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய உணவு பதப்படுத்துதல் நிறுவனங்களை ஏற்படுத்துதல் ஆகிய திட்டங்கள் ஒப்பதல் அளிக்கப்பட்டதில் அடங்கும் என்று திரு. ரவ்னீத் சிங் கூறினார்.

<<<>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனமான **EPFO**-வில் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 17 லட்சத்து 89 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தைக் காட்டிலும் 11 புள்ளி நான்கு எட்டு சதவீதம் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கான பலன்கள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்திருப்பதும், வேலைவாய்ப்பு வளர்ச்சியடைந்து வருவதும் இதன் மூலம் தெரியவந்துள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

ஜனவரி மாதத்தில் மட்டும் புதிதாக 8 லட்சத்து 23 ஆயிரம் உறுப்பினர்கள் இணைந்துள்ளதாகவும் அந்த அமைச்சகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

<<<>>>

சத்தீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்புப் படையினருக்கும், மாவோயிஸ்ட்டுகளுக்கும் இடையே நடந்த இருவேறு துப்பாக்கிச் சண்டையில் 30 மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட்டனர்.

பிஜப்பூர் மாவட்டம் பஸ்தார் வனப் பகுதியில், **Gangaloor** என்ற இடத்தில் மாவோயிஸ்ட்கள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து, பாதுகாப்புப் படையினர் அங்கு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது இந்த துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த மோதலில் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

அந்தப் பகுதியில் இருந்து 26 மாவோயிஸ்ட்களின் உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும், தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

**Kanker** மாவட்டத்தில் நடந்த மற்றொரு மோதல் சம்பவத்தில் 4 மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட்டதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

இதனிடையே உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் மாவோயிஸ்ட்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் 3 ஆயிரத்து 471 நகரங்களில் நடைபாதை வியாபாரிகள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், நடைபாதை வியாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கன திருத்தச் சட்டம் 2014ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

அதன்படி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை அத்தகைய வியாபாரிகள் குறித்த கணக்கெடுப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக திரு. மனோகர்லால் தெரிவித்தார்.

<<<<>>>>

பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கான 54 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அதற்கான குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இந்த குழுமத்தின் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பாதுகாப்புப் படைகளின் திறனை வலுப்படுத்தும் நோக்கில் நவீன பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கான திட்டங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

<<<<>>>>

மத்திய ஆயுத காவல் படையினரின் சம்பள பலன்களை மேம்படுத்துவதற்காக பாரத ஸ்டேட் வங்கியுடன் எல்லைப் பாதுகாப்புப் படை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

அதன்படி பிரத்யேக வங்கி சேவைகளை ஆயுதப் படையினருக்கு வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் நிதியுதவியுடன் எல்லைப் பாதுகாப்புப் படையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு சேவை பலன்களை வழங்குவதற்கும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

<<<<>>>>

இந்தியா வந்துள்ள பெரு நாட்டின் வெளியுறவு வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர், **Ursula Desilu Leon,** புதுதில்லியில் மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயலை சந்தித்து பேசினார்.

இந்தியா – பெரு நாடுகளுக்கு இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளை விரைவுபடுத்துவது மற்றும் இருதரப்பு பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தினர்.

நடுநிலையான சம அளவு ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து சந்திப்பின்போது திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பஞ்சாப் மாநிலத்தின் ஷம்பூ - கன்னோரி எல்லையில் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை அம்மாநில காவல்துறையினர் அப்புறப்படுத்தினர்.

ஷம்பூ எல்லைப் பகுதியில் தற்காலிக கூடாரம் அமைக்கப்பட்டிருந்ததை காவல்துறையினர் அகற்றி சாலையில் போக்குவரத்தை சீரமைத்திருப்பதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேபோல் தில்லி நோக்கி பஞ்சாப் மாநில விவசாயிகள் செல்வதை தடுப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த சிமெண்ட் தடுப்புகளையும் ஹரியானா காவல்துறையினர் அகற்ற தொடங்கியிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சென்னை சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Akanksha Salunkhe** மற்றும் **Anahat Singh** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டங்களில் **Akanksha Salunkhe** 11-5, 11-7, 11-7 என்ற செட் கணக்கில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பாவை வென்றார்.

**Anahat Singh** 11-6, 11-3, 11-4 என்ற செட் கணக்கில் தென்னாப்பிரிக்காவின் **Hayley Ward**-ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Veer Chotrani** இலங்கையின் **Ravindu Laksiri**-ஐ வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறினார்.

---------------

லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
சர்வதேச ஒலிம்பிக் குழுவின் கூட்டத்தில் ஒருமனதாக இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.
லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டி 2028ஆம் ஆண்டு நடைபெற உள்ளது.

--------------

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று புதுதில்லியில் தொடங்கின.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இதனைத் தொடங்கிவைத்தார்.
6 பிரிவுகளில் நடைபெறும் போட்டிகளில் ஆயிரத்து 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

--------------

ஆசியக் கோப்பை கடற்கரை கால்பந்துப் போட்டி தாய்லாந்தில் தொடங்கியுள்ளது.

**Pattaya**-வில் நடைபெறும் இப்போட்டியின் முதல் ஆட்டத்தில் இந்தியா – தாய்லாந்து அணிகள் விளையாடி வருகின்றன.

--------------

சிங்கப்பூரில் நடைபெற்ற இளையோர் படகுப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் உட்பட 4 பதக்கங்களை வென்றது.

-------------

உலகக் கோப்பை **Sepaktakraw** பட்னாவில் இன்று தொடங்குகிறது.
20 நாடுகளைச்சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

**<<<<The End>>>>**